Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 2044/2025 |
| Police station | : | நெல்லிக்குப்பம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW4 / PW3 |
| Name | : | திரு. கணபதி காவல் ஆய்வாளர் |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 21.07.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

<u>முதல் விசாரணை</u>:

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் பாய்ச்சல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் தேதி நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்தபோது 21.03.2019 ம் தேதி மாலை 16.30 மணியளவில் நானும் என்னுடன் முதல் நிலை காவலர்கள் திரு. கிருஷ்ணகுமார் மற்றும் திரு. அரவிந்தன் ஆகியோர்கள் பகல் ரோந்து அலுவலாக சுந்தரவாண்டி மெயின்ரோடு பஸ் ஸ்டாப் அருகில் கெடிலம் ஆற்றங்கரை ஓரம் ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தபோது இரட்டை மாட்டு டயர் வண்டியுடன் வந்தவர் எங்களை கண்டதும் இறங்கி ஓடிவிட்டார். பின்னர் பெயர் விலாசம்கேட்டு தெரிந்து கொண்ட எதிரி கமலக்கண்ணன் த/பெ, பாலகிருஷ்ணன் ஓட்டேரி என்று தெரியவந்தது.

பின்னர் இரட்டை டயர் மாட்டு வண்டி மற்றும் 1/4 யூனிட் கெடிலம் ஆற்று மணல் ஆகியவற்றை அதே இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் உடனிருந்த போலிசார் முன்னிலையில் மாலை 16.45 மணிக்கு போலிசார் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். பின்னர் வழக்கு சொத்துடன் 18.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது நெல்லிக்குப்பம் காவல் நிலைய குற்ற எண். 115/2019 சட்டப் பிரிவுகள் 430, 379 இதச r/w 21(1) MM Act ன் படி வழக்கு பதிவு செய்து கணிணி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். **மேற்படி கணிணி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றே உடன் வந்த இரண்டு காவலர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 04.06.2019 ம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கெடிலம் ஆற்று மணலை உத்தரவுபடி கடலூர் பொதுப்பணித்துறை மற்றும் நீர் வள ஆதார துறை அதிகாரி திரு. தாமோதரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெறப்பட்டது. **மேற்படி ஒப்படைப்பு ரசீது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 06.06.2019 ம் தேதி இவ்வழக்கில் சட்டப் பிரிவுகள் 430, 379 இதச r/w 21(1) MM Act லிருந்து சட்டப் பிரிவுகள் 430, 379 இதசவாக பிரிவு மாற்றம் செய்யப்பட்டது. **மேற்படி சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 03.04.2019ம் தேதி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று சமூக நீதிமன்றத்தில் பிணையில் வெளிவந்தது தெரியவந்ததால் எதிரி கமலக்கண்ணன் என்பவருக்கு எதிராக 06.06.2019 ம் தேதி சட்டப் பிரிவுகள் 430, 379 இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

இவ்வழக்கில் நான் தான் புகார்தாரர் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் விசாரணை அதிகாரியும் நான் தான்

என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சென்று மாதிரி வரைபடம் தயார் செய்தேனா என்றால் இல்லை. நான் கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மணலின் அளவும் பட்டியல் சாட்சி – 3 அவரது மணல் ஒப்படைப்பு ரசீதில் குறிப்பிட்டுள்ள மணல் அளவு வெவ்வேறு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த இறுதியறிக்கையில் காலம் 10 ல் யாரிடமிருந்து எங்கு வைத்து வழக்கு பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்தவிதமான சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரியின் மீது ஒரு பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது ஒரு பொய்யான இறுதியறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.